**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | **Case No. STC.753/2023** |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw-12 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயபால் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

1ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

12.08.2025

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அம்மாபட்டி காவல் நிலையத்தில் தனிப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஏழாயிரம்பண்ணை காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியில் இருந்தபோது சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏழாயிரம்பண்ணை காவல் நிலைய குற்றஎண்.37/2023 வழக்கில் சட்டப்பிரிவு சரியாக நினைவில்லை, ரங்கநாதன் மற்றும் சங்கர் ஆகிய இருவரையும் சார்பு ஆய்வாளர் சையது இப்ராகிம் மதுபோதையில் இருப்பதாக கூறி சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று மருத்துவர்களிடம் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கூறினார்.

2)அதனால் எதிரிகளும், நானும், முதல் நிலைக்காவலர் இருளாண்டி ஆகிய இருவரும் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு மருத்துப்பரிசோதனை முடித்து எதிரிகளை ஏழாயிரம்பண்ணை காவல்

நிலையத்திற்கு அழைத்துச்சென்றோம். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) எதிரிகளுக்கு என்ன பரிசோதனை செய்யப்பட்டதென்றால் பொதுவாக ரிமாண்ட் செய்யும் முன்பு என்ன என்ன மருத்துவ பரிசோதனை செய்யப்படுமோ அவை செய்யப்பட்டது. மருத்துவப்பரிசோதனை செய்யும் போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். மருத்துவப்பரிசோதனை எவ்வளவு நேரம் நடைபெற்றதென்றால் சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றது. நான் மருத்துவமனைக்கு வந்தடைந்த நேரம் என்னவென்றால் 03.00 மணி இருக்கும். மருத்தவ பரிசோதனை எத்தனை மணிக்கு முடிவடைந்ததென்றால் 03.50 மணிக்கு முடிவடைந்தது.

2) நானும், என்னுடன் வந்த இருளாண்டி என்பரும் தனித்தனி வாகனத்தில் சென்றோம் என்றால் சரியல்ல, ஆட்டோவில் ஒன்றாக சென்றோம். மேற்படி ஆட்டோ யாருடையது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.